# SUPPLEMENT TO THE BRAHMAVIDYA.

# ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

## அநுபந்தம்

௧௩-ம்புத்] சிதம்பரம், ஏவிளம்பிஸூ ஆடிமீ கஉக்கு 1897ஸூ ஜூலைமீ 14உ [இல -௪


### வைதிகசந்திரமௌலி.

### மகாபாசுபதாஸ்திர பராவர்த்தனப்பிரயோகம்.

தொடர்ச்சி

---

இவர் இதற்குப்பிரமாணம் எங்குகண்டனரோ அறியோம்.
ஆயின் பரதகண்டத்துச் சௌந்தரியமங்கை, தமக்குப் பல
விரோதிகள் உண்டாக்க அவர் உண்டாக்கியதுயரத்தைநோ
க்கி வருத்தமுற்றுத் தனதுச் சுபமங்கல்யலக்ஷணமான நாசி
காபரணத்தைக் கழற்றி எறிந்திருப்பதாக நினைத்து இலங்
கையை நாஸிகாபரணம் என்றார். அல்லது 'சரீரத்துள்ள
மலங்கழிய சுவாஸவழியே வெளிச்செல்வதால் அஃதை எல்
லாம் தன்னிடம்வாங்கிக்கொள்ளும் தன்மையதாயது நாஸி
காமணி'என்றும்இலங்கையை அங்ஙனம்சொன்னார். அந்தோ!
ஆதிகாலத்தில் ஆரியதேசத்துள்ள வேதவைதிக வைதிகா
னுஷ்டான மகாசத்துருவான தேவத்துரோகிகள் பரதாரக
மன மகாமன்மதயாக பரம உத்தியானவனம்நின்ற புண்ணிய
பூமியா இவர்க்குப் பரதகண்ட சௌந்தரியமங்கை நாசிகா
பரணமாயது? அந்தோ!ஜ்யேஷ்ட ப்ராதா பித்ருஸம:'மூத்
தவுடன் பிறந்தவன் தகப்பனையொப்புவான்' என்ற நீதியை
விட்டு ஆதிமுதல் ஐம்பதுலக்ஷம்வருடங்கள் அன்னமளித்த
நன்றியும்மறந்து காசுக்காக எதிரியுடன்கூட கோட்சொல்லி
அவனைக்கொலைசெய்வித்து சாசுவதாராஜ்யம்பெற்ற க்ருதஞ்ஞ
சிகாமணிவிபீஷணன் ஆக்ஷியில் சேர்ந்ததல்லவா? அது இவ
ரால் எவ்விதம்புகழப்படும்? அல்லது ஸ்ரீசூரபத்மனுடையவட
புறக்கோபுரக்காவலனான யாளிவக்திரன்வாஸத்தால்பரமபாவ
னமாயதோ அல்லது வெகுகாலமாய் புத்தர்குடிகொண்டு தத்
துவவிசாரம்புரிந்த தபோவனமாதலால் அது அதிபாவனாச்
சிரமமாயதோ? அல்லது புத்தர்மடம் பரம்பரையாய் நிகழப்
பெற்ற பெருமை அதையங்ஙனமாக்கியதோ? அல்லது எந்த
முனிகளும், எந்தசிட்டர்களும், எந்தமதாசாரியர்களும் அடி
வைக்காத பாக்கியம்பெற்றமையால் அந்நாடு நன்னாடாயதோ?
ஸ்ரீமத் பக்தசிகாமணிகள் சாக்ஷாத்தீக்ஷைபெறாத இரண்
டொரு வேதவாலங்களைப்பெற்றதால் மட்டில் சிறந்ததோ?
'ஸமுத்ர யாத்ரா' 'இனி பாதித்யயே துக்களைச்சொல்வாம்'
என்று எடுத்து (ஸமுத்ர யாநம்) ''சமுத்திரயாத்திரை''
என்று துவிஜர்களைப் பதிதராய் சுவகர்மப்பிரஷ்டராக்கும்
கன்மங்களுள் சிறந்ததென ஸ்ரீ போதாயனமுனிவர் சூத்திர
த்தில் குறித்தபடி பதிதப்பிராம்மணமூர்த்திகள் பலர் சேர்ந்த
வானப்பிரஸ்தாச்சிரமமாதலால்அத்தேசம்ஸத்தேசமாயிற்றோ?
கங்கையாதி புண்ணியநதிகள் ஒன்பதுள்ள தீர்த்தமே உத்
தமதேசம்,அதைவிட்ட கலல் அந்தணர்க்கும் பாவம்விளைவிக்
கும் என்று அனேகமுனிவர்கள் கூறியபடியால் அது மிக
வும் உன்னதபூமியாயிற்றோ? அந்தோ! சூத்திரர் பெண்களை
மணந்தவந்தணர்வம்சம்பொலிந்தமையானோ அது சிறந்தது?
வரிக்காகப்பூணூல்தரித்து கோத்திரசூத்திரம் அறியாப்பேதை
யர்வசிக்கும் ராஜ்யமாயதால் அது மேலாகுமோ? வேதங்க
ளும் வேள்விகளும் மலிந்தமைகொண்டு அது சிலாக்யமோ?
புண்ணியதீர்த்தங்கள் நிறைந்தமையால் புகழத்தக்கதோ?
தேவாந்தக நராந்தக யக்ஞசத்ருமுதலியவர் வசித்ததேச
மாகையால் அது மேனாடோ? வடமொழி தென்மொழி இர
ண்டுமிலாது சிங்களம் சீமையெல்லாம் நிறையாநின்ற நேர்மை
பற்றி அது புண்ணியபூமியோ? வேறு எக்காரணத்தாலோ
இவர் அதைப்புகழ்ந்தது! நிற்க. இவர் இன்றுதேடியெடுத்த
அத்தியாச்சிரமம் இவருக்குச் சித்திக்காதுபோனபோதிலும்
இவர் பிரமாணமெனக் கொண்டாடிய நூல்களெல்லாம் சேர்
ந்து இவரையே அத்யாசிரமராக்க (ஆசிரமங்களைக்கடந்தவர்
அவைகளைவிட்டவர்) எதுவாய் அத்தேசத்தையும் அதற்குச்
செல்லுமிடையேயுள்ளகடலையுமே சொல்லுமாகையால் இவர்
தன்மட்டில் எடுத்தபிரமாணங்களால் ஒருவழி அத்தியாசிர
மதருமமமைத்துக்கொண்டார். மேலும் இவ்வாதியார் எங்
குமே தனக்குவரும் சித்தாந்தச் சிதைவைநோக்காது மற்ற
வரைக் குற்றங்கூறும் இயல்பினர். அங்ஙனமில்லாதுழி
அபின்னநிமித்தோபதானம் கூறும் அதர்வசிரஸையும் சாந்
தோக்யத்தையும் ஸ்ரீகண்டமுனிவர் எடுத்துப்புகழ்ந்திருக்க
வும் (ப்ரக்ருதிஶ்ச) 'முதற்காரணமும்' என்றசூத்திரத்தின்
உரையில் எடுத்து விரித்திருக்கவும் அவை பரம அவைதிக
கேவலகுலாலவாதம்செய்யும் பாசுபதாகமங்களைப் புகழ்ந்தன
வென எவ்விதம் தைர்யமாய்சொல்ல முன்வருவார்! மேலும்
'பஸ்மம் இருவகைப்படும்' என்று எடுத்து'மஹாபஸ்மஶிவ:'
'மகாபஸ்மம் சிவனே' என்று சூதசங்கிதை யுபப்பிருங்கணம்
கணித்தவாறு (அக்நிரிதி பஸ்ம) 'அக்னி என்றது பஸமம்'

என்றுதொடங்கி (ஸவ-ஂஹவாஉஃஂஹஸ) 'எல்லாமல்லவோ இந்தபஸ்மம்' என்பதீருக எழும் ஏழுமந்திரங்களும் உலகெலாம்பஸ்மசிவசொரூபம் என்றுவிரித்த அதர்வசிரசு ஜாபாலவுபனிடதங்கள் கேவலநிமித்தவாதம்செய்யும் துவிதசைவர்களுக்கு சைவதீக்ஷையுடன்கூடிய பூதியைவிரித்ததாம்! பண்டிதர்காள்! காலாக்னிருத்திரம் (ஸவெ-ஷுவெஷெ ஷுவெஷவாஜிஹிரூகூஂஹவதி) 'எல்லாவேதங்களிலும் வேதவாதிகளாற் சொல்லப்பட்டது' என்றுசொல்லி, அது ஆகமோக்த பஸ்மத்தைச்சொன்னதென்றது எவ்வழகு? (ஸ்ரீவரஹிஜஂஸிவயொமிநாஂ) 'சிவாக்கினியில் உண்டாயது சிவயோகிகட்கு' என்று சைவர்களை அவைதிக பஸ்மாதிகாரி என ஒதுக்கி மேல் (ஶ்ரௌதெஹஸநிஸவ-ஷா) 'வைதிகபஸ்மத்தில் எப்பொழுதும்' என்று ஜாபாலம்கூற, அது ஆகமோக்த பஸ்மபரம் எனச்சாற்றுவது அறிஞர்முன் ஒருகொடிப்பொழுதேனும் தலைகாட்டுமோ? மேலும் ஸ்ரீமத் சம்பந்தமூர்த்திசுவாமிகளும் 'வேதத்திலுள்ளது நீறு' என்று ஸ்பஷ்டமாய் சொல்வது தாந்திரிகமே என வற்புறுத்த இவர்மனம் எவ்விதம் முன்வந்தது? இன்னும் அதர்வசிரஸில் (வ்ரதமெதத்பாஶுபதம்) 'இந்தவிரதம் பாசுபதம்' என்று முன்னிகழ்ந்த விதிப்படி தாரணம்செய்யும் திருநீற்றை 'இந்த' என்று சுட்டிச்சிறப்பித்திருக்க, இது அவைதிகதந்திரத்துள்ளதைக் கூறியதென்கிறார். ஐயோ 'மருண்டகண்ணுக்கிருண்டதெல்லாம்பேய்' என்றாற்போல இவருக்கெல்லாம் பாசுபதமாகவே தோன்றுகின்றது போலும்! மேலும் இப்படியே காலாக்னிருத்திர வுபனிடதமும் (வ்ரதமெதச்சாம்பவம்) 'இந்தவிரதம் சாம்பவம்' என்று சுட்டுகின்றது. சிவசிவ! அஃதெப்படியானால் என்ன? எல்லாம் அத்தியாசிரமந்தான்; எல்லாம் சைவந்தான், எல்லாம் அவைதிகாகமோக்தந்தான்; அங்ஙனம் அருணந்தியார் சென்றார்; இலங்கையில் ஒருமகாபுருடர் ஒப்பினார் என்றார். சித்தாந்தம் அவ்வளவிற்றானே நிலைபெற்றிடும்போலும்; ஒருசமயம் நல்லபுண்ணியவசத்தால் தருமவியாதிராதியரைப்போல் ஒருவர் எங்கேனும் வருணாந்தரத்திலும் ஜந்மாந்தரத்துள்ள கேட்டலாதிகளைக்கொண்டு சித்திபெறலாம். இருந்தால் அவரநுஷ்டானமும் அவர்சித்தாந்தமும் உலகத்திற்குதவுமா? சிறுத்தொண்டநாயனார் சிசுஹத்திசெய்தாரென்றால் அது சைவதருமமாமோ. அன்புமிகுதியால் அங்கு அதுதோஷமாகாது எனலாமேயன்றி, அதுதருமம் எனல் என்றும் பொருந்தாது. அப்படிக்குள்ளதோ ஏகதேசத்துள்ளவரைப் பிரமாணமாகக்கொள்ளல்கூடுமோ? மேலும் பிரமாணம் என்பது உபயவாதிகள் ஒப்பியதாகவல்லவோ இருக்கவேண்டும்! அங்ஙனமின்றி கர்ணபரம்பரையில் ஒருவர் பெரும்புகழ்பெற்றவர், ச்ட்டநிருபணசபையில் மற்றவர் பெருமைபெற்றவர் என்று எழுதுவது ஏட்டைக்கெடுப்பதன்றிச்சித்தாந்தத்துக்கு அது சாதகமும் ஆகாது பாதகமும் ஆகாது. மேலும் இவர் இங்கு அடுக்கிய புராணங்களாய வாயுசங்கிதை, சிவகீதை, கூர்மபுராணம், லிங்கபுராணம், கைலாசகாண்டம், மகாபாரதம், உபதேசகாண்டம் முதலிய நூலும் தாற்பரியக்குறியீடுகள் ஆறும் கொண்டு விசாரிக்கப்பட்டமையின், அவையெல்லாம் வைதிகபாசுபதத்தையே குறித்தனவேயாயின. அற்றேல், இவ்வாதியும் அங்ஙனமே 'நூல்களெல்லாம் ஒருநெறிப்பட வைதிகபாசுபதோபநிடதங்களோடிசைந்து உரைப்பனவே' என்றேமுடிபுரை கூறினர். அங்ஙனமாக நீவிரும் அதே சித்தாந்தங்கொண்டால் அது உமக்கு அர்த்தாந்தரமும் பிரதிவாதிக்குச் சித்தி சாதனமும் ஆகாதோவெனின், அறியாது கூறினாய், ஆதியிலேதானே இவ்வாதிகொண்டொழுகும் காமிகாதிகளிருபத்தெட்டாகமங்களும் அவைதிகங்களென்று வாயுசங்கிதை கூர்மபுராணம் முதலிய புராணங்களால் ஸ்ரீசிவதத்துவவிவேகாதி நன்னூலுடையார் திருவாக்கானும் நிரூபித்தோமாதலால் அவர்கொண்ட சித்தாந்தவுண்மை அறியாமந்தரை மயக்கும் வித்தையென்றொதுக்குக. மேலே அவர் நீட்டி முழக்கும் குற்றம் தமக்கும் மலைபோல் தலையிற் சுமந்திருப்பதையறியாது ஏதோ தாம் உண்மையறிந்தவரும் மற்றவர் அங்ஙனமாகாதவருமாய் நினைத்து அவ்வுண்மை தெரியமாட்டாது தத்தமக்கு வேண்டியவாறெல்லாம் துரபிமானங்கொண்டு பிதற்றும் உலகத்தார் எனக்கடவர் என்று இறுமாந்தார். இவ்வாக்கியத்திலுள்ள இவரறியாமையைச்சிறிது காட்டுவோம். 'அவ்வுண்மை தெளியமாட்டாது' என்றனரே! எவ்வுண்மை தெளியமாட்டாது?

1. மேற்கண்ட வாயுசங்கிதை சொல்லியபடி காமிகாதிகள் அவைதிகாகமங்களென்றவுண்மையா?

2- அல்லது (நஸெவ்யமெதத்கதிதம் வெதபாஹ்யம் ததெதரஸ) இது சேவிக்கக்கூடாது. வைதிகபாசுபதத்திலும் வேறாயுள்ளது வேதபாஹ்யமென்று கூர்மபுராணம் காமிகாதிகளை ஒதுக்கியவுண்மையா?

3. அல்லது சுசீலராஜனுக்கு சுவேதாசுவதர மகாமுனி தனது சாகையிலுள்ள வேதாந்த நல்லறிவை சன்னியாசபூர்வமாக உபதேசித்தாரேயன்றி அவைதிகாகமத்துள்ளதை அன்றென்று புராணங்களிலுள்ள வுண்மையா?

4, யாவெஷவாஹ்யாஃஸ்ம்ருதயஃ 'எது வேதபாஹியங்களான ஸ்மிருதிகள்' என்ற சூதசங்கிதையும், மனுஸ்மிருதி அவைதிகத்தின் வழிபோல் வைதிகர்களுக்குப் பாபஹேது என்றவுண்மையா?

5. சிவகீதையில் சொல்லப்பட்ட விரஜாதீக்ஷை தனது சாகையில் தனது கிருஹ்யாக்னியில் செய்துகொள்ளவேண்டியதேயன்றி அவைதிகாக்னியிலல்லவென்றவுண்மையா?

6. காமிகாதி தந்திரங்களை வேதமார்க்கப் பிரஷ்டருக்கே ஈசன் உபதேசித்தானென்று சூதசங்கிதை சொல்லுமுண்மையா?

7. வேதங்கள் பாரமார்த்திகம் வியாவகாரிகம் இவ்விரண்டையும் அதிகாரிகள் பரிபாகத்துக்கேற்ப உபதேசிக்கும் தந்திரங்கள் மந்தாதமாதிகாரிவிஷயம் என்று சூதசங்கிதையில்பெறப்பட்டவுண்மையா?

8. 'காயத்திரியுடன் சிவஞானத்தைப் பெற்முன் பிர்ம்மதேவன்' என்று வாயுசங்கிதையில் சொல்லப்பட்ட வுபயஞதிகளுடன் கூடிய பாசுபதவிரதமே வைதிகபாசுபதம் மற்றது அவைதிகம் என்றவுண்மையா?

9. (ஜாபாலொக்தெநவ்ரதெந) ஜாபாலோபநிடதம் கூறியவாறு (வெதொக்தெநவாமெண) 'வேதத்தில்சொல்லியமார்க்கத்தைக்கொண்டே' என்று சூதசங்கிதை பலவிடங்களில் வைதிக தாந்திரிகங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்றனவென்று காட்டியவுண்மையா?

10. (தந்த்ரம்பாசுபதம்நாம பாஞ்சராத்ரம் விஶ்ருதம் | யோகஶாஸ்த்ரம்விவ்யாதம்தந்த்ரம்லோகாயதஞ்ச) 'பிரசித்தமான பாசுபததந்திரமும் கேள்விமிகுந்த பாஞ்சராத்திரமும் பெயர்பெற்ற யோகசாஸ்திரமும் அங்ஙனமே உலோகாயதமும் என்று பாரதம் சாந்திபர்வம் உலகாயுதத்துடன் பாசுபதத்தைச்சேர்த்த வுண்மையா?

11- சூதசங்கிதையில் சாம்பவ பாசுபதங்களில் தீக்ஷைபெற்று பாஷாண்டிகளாவீர்களாகவென்று கௌதமர் சபித்தார் என்று காணப்படும் உண்மையா?

12- 'வேதமார்க்கத்தைவிட்டு குமார்க்கத்தில் செல்லுகவென்று ததீசிமுனிவர் சாபமிட்டார்' என்று சங்காஸம்ஹிதைசொல்வது உண்மையா?

13- '(தயீசிநாமௌதமேந ஶபாத்யெப்ராஹ்மணாஶ்ச | கலாவவதரிஷ்யந்தி நிந்த்யாஸ்தெ பஹிஷ்க்ருதாஃ) 'ததீசியாலும் கௌதமராலும் சாபம்பெற்ற பிராம்மணுதமர் எவர், அவரெல்லாம் கலியிற் பாஷண்டவம்சத்தில் அவதரிப்பார்; அவரே நிந்தியர்; அவரேபஹிஷ்கிருதர்' என்று கூர்மபுராணம் கூறியவுண்மையா?

14- 'சூதசங்கிதை முதலியபுராணங்கள் ஸ்பஷ்டமாக, 'வைதிகர்க்கு வைதிகமே தாந்திரிகர்க்குத் தாந்திரிகமே' என்று வியவஸ்தைசெய்து, பஸ்மதாரணம் (ஶ்ரௌத்ர வியயதெயஸாத்த்யாமீவதிதொ ஹவெக) 'அது வேதத்தால் விதிக்கப்படுதலால் அதைவிட்டவன் பதிதனுவான் என்றதால் சுத்தவைதிகமேயாமன்றி தந்திரசம்பந்தம் பெருது' என்றவுண்மையா?

15- 'தந்திரங்களுக்கு வேதங்களாச்சிரயமாயினுமாகுமேயன்றி தந்திரங்கள் வேதங்களுக்காசிரயமாகாது' என்று சூதசங்கிதை காட்டியவுண்மையா?

16- வேதங்கள் 'செய்யாமொழி பொய்யாமொழி பொய்யாமறை' என்று உண்மைநாயன்மார் புகழ்ந்திட்டவுண்மையா?

17- 'வைதிகத்தின் வழியொழுகாதவர் வேதவேள்விகள் நிந்தனைசெய்துழல்வர். மறைவழக்கமில்லாத மாபாபிகள், அந்தணாளர்புரியு மருமறைச்சிந்தை, செய்யாவருகர் வேட்டுவேள்வி செய்யும் பொருளைவிளிமூட்டுசிந்தை, முறட்டமண் அழலதோம்பும் அருமறையோர்திறம். விழலதென்றுமருகர், வேதனூல்பயில்கின்றது வாயிலே, விண்ணிலாரறிகிலா வேதவேதாந்த நூலெண்ணிலாரெழின், அந்தணர்க்குக்கருங்கலமருமறை யாறங்கம் மறையின்றியிடுவதில்லையே' என்பதாதியால் உண்மை நாயன்மார்கள் வேதவேதாந்தங்களையன்றி மற்றவையை அந்தணாளர்களுக்குதவாதென்ற வசனமுண்மையா?

18- விரிசடைவிரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர் காபாலிகர் என்று ஜிஹ்வாராஜன் அந்தணரென்னும் வைதிகரை அவைதிகபாசுபதருடன் சேர்க்காது வேறுபடுத்தினவுண்மையா?

19- ஸ்ரீஹரதத்தமூர்த்திகள் 'அத்துவானம்' என்றசெய்யுளில் அந்தணர்க்குத் தீக்ஷையுபநயனமே என்று திருவருள் வலியால் எரிமழுவேறியேற்றுபாகன் திருப்புகழ்பாடிய போகாவலியில் பிரதிஞ்ஞை செய்தருளியவுண்மையா? இக்கதை முன்னூறுவண்டிச்சுவடிக்கதைபோல் கர்ணபரம்பரையல்ல; மற்று புராணத்துள்ளது. ஏகதேச சம்மதமல்ல; மற்றைய கஞ்சனூர்பிராந்தஸ்தலபுராணங்கள் எல்லாவற்றிலும் காணப்பட்டது. இம்மகானவதாரம் சிவரகசியத்திலும் சொல்லப்பட்டது. அருணந்தியாதியரைப்போல் சைவர் மட்டும் கொண்டாடுவதல்ல. இவர் சுதர்சரெனச் சூதசங்கிதையிலும் குறிக்கப்பட்டார். அங்ஙனம் மற்றவராகார்.

20. ஸ்ரீமத் தீக்ஷிதஸ்வாமிகள் சிவதத்துவவிவேகத்தில் உத்தரபாகத்தில் வைதிகாவைதிக ஆகமப்பகுபாடு எடுத்துக் காமிகாதிகள் அவைதிகங்களென்று நாட்டினவுண்மையா? சில மகானவதாரமும் சிவரகசியத்திலுண்டு.

21. ஸ்ரீகிருஷ்ணனுக்கு உபமன்யுபகவான் செய்வித்த தீக்ஷை வைதிகமேயென்று புராணங்கூறின நேர்மை விரித்தோமே அந்தவுண்மையா?

22. புராணங்களிலெங்கேனும் சிறிதுபாகம் வேதசம்மதார்த்த விருத்தமாய்க் காணப்பட்டால் அது தாந்திரிகானுக்கிரக வசனங்களை ஓதுக்கினேமே அந்தவுண்மையா?

23. வைதிகபாசுபதவுபநிடதங்களென்று நீர்மயங்கியவுபநிடதங்களுந் உமது ஆகமங்கள் கூறியவாறு கேவலநிமித்தவாதத்தைக் குலைத்ததென்று காட்டினேமே அந்தவுண்மையா?

24. நீர் ஆசிரியரென்று நம்பி வெளியேறிய ஸ்ரீஸ்ரீகண்டயோகிகள் தமது பாஷ்யத்தில் 'ப்ரக்ருதிஸ்து பத்யாஃ' என்ற|சூத்திரங்களில் உமக்குத் தீக்ஷைகொடுத்துஉம்மைப்பாவனப்படுத்திய காமிகாதி ஆகமங்களிற்கண்ட கேவல நிமித்தவாதத்தை மறுத்து வைதிகசிவாகமங்களையே யேற்றுரென்று காட்டினேமே அந்தவுண்மையா?

25. ஷை குருமூர்த்திகள் பிரமசூத்திரபாஷ்யத்துவக்கத்தில் பூர்வமீமாஞ்சையும் உத்தரமீமாஞ்சையும் ஒரே சாஸ்திரம் என்றும் அதிற்கண்டபடி கர்மானுஷ்டானமும் ஞானமும் சேர்ந்தே மோக்ஷஹேதுவென்றும் சமுச்சயவாதஞ்செய்து உமது சித்தாந்தத்தை ஓதுக்கினுரே அந்த உண்மையா?

26. கஶாஸ்த்திவெநஶப்தாத் 'அசுத்தமெனிலன்று சத்தத்தால்'என்ற சூத்திரத்தில் யாகங்களைப்புகழ்ந்து அதை இகழ்வோரை மறுத்தாரே அந்தவுண்மையா?

27. ஸ்ரீஹரதத்தமூர்த்திகள் விஶ்வேஶ்வரஸ்வ என்றெடுத்த சுலோகத்தில் வேதமென்ற மகாநதியின் வாய்க்கால் ஆகமங்களென்று கூறினரே அந்தவுண்மையா?

28. ஸ்ரீமாதசாரியர் போதாயனர் திரிபுண்டரதாரணவிதியைச் சாங்கோபாங்கமாக ஆகமசம்பந்தமின்றி எடுத்துக்காட்டியிருக்கும் உண்மையா?

29. என்றும் எவ்வாசிரியரும் கேட்டறியாத புதியபகுபாடு உபநிடதங்களில் அத்தியாச்சிரம வுபநிடதங்கள் சாங்கியயோக வுபநிடதங்களென்று செய்து நீர் இடற்பட்டதுதவறென்று காட்டினேமே அவ்வுண்மையா?

30. அத்தியாச்சிரமத்துக்கும் நீர்கொண்ட பொருள்வழுவேயென்றும் ஸ்ரீமாதவாசாரியர் சூதசங்கிதை வியாக்கியானத்தில் சொல்லியதே நியாயமென்றும் அது ஸௌரபுராணாதிசம்மதமென்றும் நிலைநிறுத்தினேமே அவ்வுண்மையா?

31. வாயுசங்கிதை ஆதிமுதல் இறுதிவரையில் சுத்தவைதிக சம்பிரதாய சாஸ்திரமென்று நிரூபித்தோமே அந்தவுண்மையா?

32. ஸ்ரீகண்டகுருநாதன் பாஞ்சராத்திராதிகரணத்தில் 'வாஂவாரதெ-வவெளஜெவ' என்ற சுலோகத்தை எடுத்துதகரித்த குறியால் சூதசங்கிதை யஞ்ஞவைபவகண்டத்தில் அதே சுலோகத்துக்கு முன்னும் பின்னும் அகப்பட்டவையெல்லாம் வைதிகர்க்கருகமல்லவென்று சூசிப்பித்து சாம்பவபாசுபதாதி தந்திரங்களை ஒதுக்கினரே அவ்வுண்மையா?

33. ஸ்ரீகண்டர் கைலையில் சிவஞானபோதத்தையுபதேசித்ததாவும் அதில் கேவலகாரணன் ஈசனெனப்பட்டதென்றும் இப்புண்ணியபூமியின் ஸ்ரீகண்டபாஷ்யத்தில் அது வேவேதாந்த அசம்மதவாதமென்றும் யுக்திவிருத்தமென்றும் நிரூபித்தால் பரலோக இகலோக ஸ்ரீகண்டர் இருவருக்கும் சேடராகும் உமது கதி திருசங்கு கதியாயினவுண்மையா?

34. உண்மைநாயன்மார்கள் எங்கும் சனகாதிகளுக்கு வேதவேதாங்கங்களையே உபதேசித்தருளினரெனத் திருவாய்மலர்ந்தருள, அவர் ஆகமோபதேசம் செய்ததாக நீர் அபார்த்த புராணங்களுக்குக் கொண்டீரென்று புலப்படுகின்றதே அந்தவுண்மையா?

35- உண்மைநாயன்மார்கள் அன்று நால்வருக்குபதேசித்தது வேதங்களேஎன்று 'மறை நால்வர்க்குருவளரால் நீழலமர்ந்திங்குரைசெய்தார்' ஆலடைந்த நீழல்மேவியருமறைசொன்னதென்னே, ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்கீரிருவர்க்கிரங்கி நின்று, சேரியநான்மறைப் பொருளையுரைத்தொளிசேர், அன்றாலின் கீழ்த்திருந்து மறைபொருள் நால்வர்க்கருள்செய்தானை, வேதியர்கள் நால்வர்க்கும் வேதஞ்சொல்லி வேதநான்குங் கல்லாநீழற்கீழளங்கண்டானை, 'நால்வர்க்கறம்பொருள் வீடின்பமாறங்கம் வேதந்தெரிந்தானை, மறைநான்கும் கல்லாநீழற்கீழ்ப்பன்னியவெங்கள் பிரான்' என்பதாதியால் நிரூபித்திருக்க, அதை மாற்றி அவைதிகாகமங்களையுபதேசித்ததாக இவர் கண்ட கனவை மாற்றினேமே அவ்வுண்மையா?

36. தாங்கள் கொண்ட பிரமாணங்களை முக்கியமானவையென்று தாபித்துக்கொள்ளவியலாது அங்குமிங்கும் சிதறுண்டு கிடக்கும் தமது சித்தாந்தத்தை ஒருங்கு சேர்க்காது வைதிகரைச் சீர்திருத்த இவர் எழுந்தருளியவுண்மையா?

மற்றதை அவரே தெரியச்செய்வாராக. அந்தோவிவர் உண்மையறிந்தவழகு இவ்வாறிருக்க அம்மட்டோடடங்காது 'தத்தமக்கு வேண்டியவாறெல்லாம்' என்று குதிரை தூக்கிப்போட்டதுமல்லாமல் குழியும்பறித்ததாம் என்ற பழமொழிக்கிலக்காகினர் இவரென்பதை மேலே விரிப்பாம். தத்தமக்கு வேண்டியவாறென்றாரே, எது எமக்காவது எம்மினத்தவர்க்காவது வேண்டியது பாருங்கள்!

I. உபநிஷத்துக்களுக்கென்றும் எவரும் கேட்டிராதபகுபாடெமக்கு வேண்டியதோ?

2. எவ்விதத்தாவது வேதசம்பந்தம் எமக்கு வேண்டுவதோ?

3. சொன்மாத்திரையிலாவது பரதகண்ட சம்மந்தமெமக்கே வேண்டுவதே.

4. எமது மதமூலக்கிரந்தமான வேதங்களுக்குப் பிராமாண்யந்தானே ஏலம்போடப்படுவதால் அதை நாட்ட நாட்டுப்புறத்தார் வசனமாவது எமக்கே வேண்டுவதோ?

5. சர்வப்பிரசித்தமான வேதபுராணேதிகாச தர்மசாஸ்திரங்களை விட்டு எங்கேனும் க்ஷேத்திரபுராணம் முதலியவுத்தமசாஸ்திர வசனங்கள் எமக்கே வேண்டுவனவோ?

6. எவ்விதத்திலாவது ஒரு வைதிகமந்திரம் எங்களுக்கே தானே வேண்டுவது.

7. எங்கே சிவசப்தம் கிடைக்கும், எங்கே தீக்ஷைவிபூதியென்பதுண்டு, அதையெல்லாம் புரட்டிப் புரட்டிப்பார்த்து தமக்கு வேண்டியவாறு பொருட்படுத்தவேண்டுவதெமக்கே தானே?

8. விவாகத்துக்கு மணமகன் ஒப்பாதிருக்க அவனைக்கட்டிவைத்து அவன் கையால் மங்கிலியத்தைத் தொடவுமில்லாதிருக்க அவன் பெண்சாதி இவள் என அவன் சொத்துக்காசைப்பட்டுச் செய்யும் பொய்க்கட்டு விவாகம்போல, வைதிகரெவரும் எமக்கு வேண்டாமென்று விட்ட ஆகமத்தை அவர் கழுத்தில் கட்டியடித்து எமக்கும் வைதிகர்சம்பந்தமுண்டு என லோகோத்கர்ஷம் பெறவேண்டுவதெமக்கோ?

9. உலகோபகாரார்த்தமாக ஈசன் ஆணைப்படியவதரித்த பாரமேசுவரர் எவரும் விதந்து புகழ்ந்திடும் வேதவேள்வி பிரணவம் ஷடக்ஷரமாதிகளை வைதிகசிரேஷ்டமான ஸ்ரீவிபூதியோகத்தையும் புதிதாக ஸ்தாபித்துக்கொள்ளவேண்டியதெமக்கோ?

10- தாம்கொண்ட காமிகாதிகளைத் தூஷித்துவரும் புராணாதிகளுக்கு விபரீதப்பொருள் செய்யவழிதேடவேண்டியதெமக்கோ?

11- ஆகமம் இருபத்தெட்டும் ஒன்றுக்கொன்று விரோதமாகப் பொருள்கொடுக்குமிடம் தமக்கனுஷ்டிக்க வேண்டிய வழிதெரியாது வைதிகர் அனுஷ்டானத்தைப் பார்த்து அந்தவழியை அனுசரித்தவழி பொருட்படுத்திக்கொண்டு இடற்படவேண்டுவதெமக்கோ?

12- தாம்கொண்டமதம் வைதிகமாகவே யாம் வைதிகர் என்று ஒளிமறைவில்லாது வைதிகர் சொல்லிக்கொள்வதுபோல் தாம் கொண்டு வழிபடும் தந்திரங்களின் பெயர்வழி 'தாந்திரிகர்யாம்' என்று கம்பீரமாய் வெளிவரப்பயந்து மற்றவர் பெயராய வைதிகர் என்பதைக்கவர்ந்து உலாவவேண்டுவதெமக்கோ?

13- 'பொன்னுக்கு 'காக்கைப்பொன்' என்று அடைசேர்ந்தாப்போலும் 'முத்துக்கு கொட்டைமுத்து' என வடைசேர்ந்தாற்போலும் வயிரத்துக்குப் புளிவைரமென்ற விசேடணமமைந்தாற்போலும் கோத்திரம் கோசரம் சூத்திரந்தெரியாத 'ஆலம்பாயன' கோத்திரமாதி அப்பிராம்மண கோத்திரங்களுடன் 'சிவவிப்பிரர்' என்று பெயரை மெள்ளமெள்ளச்சொல்விக்கொள்ளவேண்டுவது எமக்கோ?

14- 'ஆகமதீக்ஷிதர்' நிந்தைசெய்யும்ஸ்மிருதிபுராணவசனங்களுக்கு வழிதேடவேண்டிய வவசியம் எமக்கோ?

15- 'வேதம் சுருதி பொய்யாமொழி செய்யாமொழி' என்பதாதி சொற்களைப்போல் தமக்கேயுரியதெனவுரிமை பாராட்டக்கூடிய பெயரும் மற்றபுஸ்தகத்தை 'ஸர்வோத்தமம்' மெனஸ்தாபிக்கவேண்டுவது எமக்கோ? ஆகமம்என்றசொல்வேதத்துக்கும் பாஞ்சராத்திர பௌத்தாதிகளுக்கும் பொதுவாமென்க.

இங்ஙனம் எல்லாவகையாலும் சித்தாந்தத்துக்குவேண்டிய சிங்காரம் வேண்டப்படுதலின் அவ்விதம் தாம் தமக்கு வேண்டியவாறு முயல்வதைமறைத்து மற்றவர் அங்ஙனமென்று தாம் எழுதுவது வைதிகர் அறியார் என்றதைரியத்தாலோ, தெரிந்தாலும் அவர்தம்மைலக்ஷியஞ்செய்து மறுத்திட்டார் என்ற எண்ணத்தாலோ, அங்ஙனம் மறுத்திட்டாலும் வடநூற்பயிற்சியில்லாத நம்மினத்தார் அதைச் சிறிதும்மறியாராகவே, அக்கோஷ்டியில் யாம் ஆசிரியராகலாம் என்ற அவாவாலோ யாதோ தெரியவில்லை. இதனோடுநில்லாது 'துரபிமானங்கொண்டு பிதற்றும் உலகத்தார்' என்றார். ஐய, சிறிது கருணைகூர்ந்து கவனியுங்கள்—

1- உலகெலாம் புகழப்பாஷ்யஞ்செய்து ஸர்வஞ்ஞ பீடமேறிய பெருமானைத் தூஷிப்பது துரபிமானமா? அல்லது செய்தபொருளுக்கு விரோதம்செய்வது துரபிமானமா? அன்றி அதைக்கொண்டொழுகுவது துரபிமானமா?

2- எல்லாவேதாந்தங்களுக்கும் பொருள்செய்தஏகபரமாசாரியரான ஸ்ரீமாதவாசாரியர், எல்லாவேதங்களுக்கும் சமரஸபாவ சித்தாந்தப் பொருளுரைத்த ஜகத் குருஸ்வாமிகள், வேதாந்தங்களில் சித்தாந்தம்மாறுபட்டால் ஆசாரியத்துவம் வகித்த ஸ்ரீஸ்ரீகண்டயோகிகள் ஸ்ரீராமானுஜாசாரியார், ஸ்ரீமத்துவாசாரியார் ஆதியாசாரியார் ஆக எல்லோரும் ஒருங்குசேர்ந்தொப்பிய பொருளுடனுங்கூடப் புரண்டு பேசுதல் துராக்கிரஹமா; அல்லது வேறு (சிரோவிருதம் என்றவிடம் இவர் அவ்விதம் பொருட்படுத்தினார்)

3- எல்லாவேதாந்திகளுக்கும் பரமாசாரியரான ஸ்ரீவியாஸமாமுனிவர் திவ்யசூத்திரங்கள் 'ஸ்வாத்யாயஸ்ய' என்றசூத்திரத்துக்கு விருத்தமாக 'சிரோவிருத சப்தத்துக்கு நவீனப்பொருள் உரைத்தது துரபிமானமா? இல்லையா?

4. வேதவியாஸசூத்திரம் மோக்ஷமார்க்கமென்றும் கர்மசாஸ்திரம் அதற்குமுந்திய காண்டமென்றும்,தானென்னும் தன்மை ஈசனையே குறிக்குமென்றும், அவனே உலகவுபாதானமுமென்றும், வேதங்களே சாஸ்திரங்களென்றும், அவைகள் அபௌருஷேயங்களேஎன்றும்நிரூபித்துவரும் ஒருசமயம் (தம்மதத்துக்கும் ஓர் வேதாந்தபாஷ்யம் வேண்டுமென்று தேடித்திரியும்பொழுது) தமது குருவென்றும்ஒத்துக்கொள்ளப்பட்டவருமான ஸ்ரீகண்டாசாரியரையும் சிறிதுங்கவனியாது அவருக்கும் விரோதார்த்தம் குறிப்பது துராக்கிரஹமோ அல்லவோ?

இவ்விதம் நிரூபித்தாற் பெருகும் துர்க்குணத்தை அதிகமாய்ச் சொல்வது அவ்வளவுசிதமல்ல. இவர் வைதிகசித்தாந்திபோல் நடிக்கவெழும்பொழுதே சுத்த வைதிகசிகாமணிகளைப், பிதற்றுகின்றார் என்பதாதி வீண் வசச்சொற்களால் நிந்திக்கின்றாரே. அந்தோ! ஸ்ரீசுந்தரமூர்த்திஸ்வாமிகள் 'வேதியர்தம்மைவெகுளேன் வெகுண்டவர்க்குந்துணையாகேன்' என்றனுக்கிரகித்ததையும்ஸ்ரீமத்கௌணியர்பிரான் 'அனற்படுதடக்கையவ ரெத்தொழிலரேனும் நினைப்புடைமனத்தவர்வினைப்பகையுநீயே' என்றருட்சுரந்ததையும், அந்தநாயனாரே 'மறைவேள்விபயின்றார் பாவத்தை விடுத்தா'ரென்று நிரூபித்ததையும் இவர் அறியார்போலும். ஸ்ரீஹரதத்தமூர்த்திகளும் அங்ஙனமே 'யஜ்ஞோஹணாநுவ்ரதி' என்றவிடம் குறித்தார். இங்ஙனமிருக்க 'பிதற்றி' என்றது பெருந்தவறன்றி அவருள்ளடங்காப் பொங்குமாக்கிரஹத்தைக்குறிக்குங் குறியீடாகின்றது. 'உலகத்தார்' என்றவர் கருத்து சாமான்யரென்ற கருத்தால், 1. இவர் உலகாதீதரானது இப்புண்ணியபூமியுடன் சம்பந்திக்காதவூரிற்பிறந்து வாழ்ந்தமையாலோ. 2. இப்பரதகண்டத்துள்ள வைதிகவர்ணாச்சிரமங்களின் முறை மீறியதானோ. 3. வைதிகருடன் சேராமையாலோ மற்றெதனாலோ அறியோம். அவர் விபரீதமாயுபயோகித்தாலும் அது ஆக்ரஹக் காரணமாகச்சொன்னதாகையால் யாம் அதை ஒரு குற்றமாகக்கொள்ளாது விட்டோம். 'உலகமென்பது உயர்ந்தோர்மட்டே'என்ற வாக்கியத்தின்படி அதைக் குணமாகவுங்கொள்ளலாமேயெனில் 'பிதற்று'மென்ற சொல் அக்கொள்கையைத் தடைசெய்கின்றதென்க. இவ்வித வசச்சொற்கள் அவருக்கும் அவரினத்தார்க்கும் சித்தாந்த பூஷணமானவையாகையால் அவைகளை விட்டால் அழகு குறையும். நிற்க; பிறகு இவ்வாதியாருக்குக் கிடைத்த ஒரு சிறிது தௌர்ப்பாக்கியத்தைப்பற்றி யாம் அடைந்த விசனத்தைக் காட்டாதொழிய முடியாதுபற்றிக் காட்டுகின்றோம். இந்தப் பத்திரிகையினிறுதியில் இவ்வுண்மைகளையோர்ந்து பரதகண்டமென்னும் சௌந்தரிய மங்கையின் நாசிகாபரணம்போல் விளங்கும் இலங்கையிலே தேசாதிபதியவர்களோடிசைந்த சட்ட நிரூபணசபையிலே பரசமயங்களைப் பாறச்செய்யும் மகாபுருஷரென்றுபோற்றப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தமது பெரிய புராண சூசனத்திலே கிருஷ்ணன் உபமன்யு இவர்கள் சிவதீக்ஷைபெற்றுச் சிவபூஜைசெய்து தாம் விரும்பிய பயனைப்பெற்றாரென்றும் அந்தக் கிருஷ்ணன் சிவதீக்ஷைபெற்ற சரித்திரம் வாயுசங்கிதையில் உத்தரகாண்டத்திலும் மகாபாரதத்தில் அனுசாசனபருவத்தில் 14-ம் அத்தியாயத்தில் கூ

மபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றதென்று வரைந்திருக்கின்றார்கள்' என்றெழுதினார். இதனைச்சற்று விசாரிப்பாம்— 'இவ்வுண்மைகளையோர்ந்து' என்றார். இதனால் பரதகண்டவாசிகளான மகரிஷிகள் கூடவறியாத இந்நவீன சைவர் அறிந்தவுண்மைகளை அறிந்தவருள் இவருக்குச் சம்மதரான ஆசாரிய நாவலரே உண்மையறிந்தவராம். ஆதலாற்றான் அவரும் அவரினத்தாரும் ஸ்ரீகண்டசிவாசாரியர் பாஷ்யத்தில் எடுத்த ஏகதேசிமதத்தை அவரது சுவயசித்தாந்தமாகக்கொண்டு வேதசிவாகமங்களுக்கு வேற்றுமை காண்கிலேம்' என்றனர் ஸ்ரீகண்டபாஷ்யக்காரர் என்றார்போலும். அவர் இத்தகைய உண்மையறிந்தாரென்றதற்குச்சாக்ஷியம் சட்டநிருபணசபையார் கைச்சாத்தாம். இஃதிவர் கொண்ட பரமப்பிரமாணவருணந்தியார் வாக்கினும் மேலானதென ஒப்பவேண்டுவதே. இனி ராஜாங்கத்தில், சென்றுபோன தாமஸ்நாடாருக்கு சம்ஸ்கிருதத்தில் எம். ஏ. பட்டம உண்டாதலால் அவரும் இனி வடநூலாசிரியராவாரோ யாதோ அறியோம். ஷ நாவலரவர்களுக்கு ஆரியாவர்த்தத்துள்ள ஒரு பெரியோர் கொடுத்த யோக்கியதாபத்திரிகை இவருக்கு அகப்படாதுபோனதென்னையோ! அந்தோ! அந்த நாவலர் கிறிஸ்துமதம் முதலிய துர்மதங்களைத்தன்னாலியன்றமட்டில் கண்டித்தும் அனேக பழையநூல்களைப் பிழையற அச்சுவழியேற்றியும் பாலபாடங்கள் சில செய்வித்தும் பாடசாலைகளைச் சிலவற்றைத் தாபித்தும் நம் புண்ணியபூமிவாசிகளனேகர் அனுக்கிரகமும் பெற்றாராகவே, அவருக்கித்தேசத்தவர் யோக்கியதாபத்திரிகை அநேகமிருக்கலாம். ஆயினும் சிதம்பரத்துள்ள சோ-பா- சபாபதிநாவலரென்பவர் அவரைத் தாந்திரீகரெனல்இந்த நவீனச் சபாபதிநாவலர் சொல்லுக்கு வழுதேடும் முன் ஆறுமுகநாவலர் பக்ஷபாதிகள் இவரை அங்ஙனஞ்சொல்ல, இரண்டிலும் சேராத இந்த அய்யர் சிறிதுகாலம் ஞானப்பிரகாசத் தம்பிரான் கண்ட சிவசமவாதமே சிறந்ததென்று வாதிக் கப்பலவழிசென்று புதிய சைவம் ஒரு கரை காணாதிருக்க இன்று அவரை இவர் புகழவந்ததுமட்டிலல்ல; அவருக்கு ராஜாங்கத்தில் யோக்கியதா பத்திரிகையே ஆசாரியத்தன்மையைக் கொடுக்குமென்று நினைத்தது மிகவிந்தையே. மேலும் இவ்வாதி இந்தவிஷயம் ஆரம்பிக்கும்பொழுதே B.A. F. A. பரீக்ஷை சட்டங்களையே ஆதாரமாகக்கொண்டு உபநிடதப்பகுபாடுசெய்தார்.

அவ்வித சுத்தாத்தியாசிரம சித்தாந்தத்துக்கு ராஜாங்க யோக்கியதா பத்திரிகையே வேண்டும்போலும்! அந்தோ! அந்தராஜாங்கமும் பண்டையகாலத்துக்கு க்ஷத்திரியராஜாங்கமாகவாவது அல்லது இக்காலத்தும் ஓர் இந்துராஜாங்கமாகவாவதிருந்தால் அந்தயோக்யதாபத்திரிகையும் சன்மதாபிமானிகளிடம் மதிக்கப்படும். அதுவுமில்லை; இவ்வளவும் போதாதென்று 'அவரே உபமன்யுபகவான் கண்ணனுக்குபதேசித்தது தாந்திரீகதீக்ஷையென்றனர்' என்றார். ஏதோ சிறிது புண்ணியத்தால் புண்யபூமிவாசமும் அதிலும் அவிமுக்த க்ஷேத்திரவாஸமும்பெற்ற இவருக்குச் சமீபத்தில் உள்ள அனேக வைதிக வித்துவான்களைக் கேட்டும் அனேக கோசங்களைப்பார்த்தும் உண்மையறிய சௌகரியம் நேர்ந்திருக்க அந்தோ! வேதமார்க்கத்தைத் துறந்து ஆகமமார்க்கத்தைத்தழுவியதுபோலவே ஆசாரியரைத்தேடி ஆரியாவர்த்தத்தைவிட்டு ஆசுரபூமிக்கே ஓடநேர்ந்தது பரிதாபம்! பரிதாபம்!! அந்நாவலர்தான் என்னசெய்வார்! அவர்கள் பிறந்ததும் வளர்ந்ததும் இலங்கையாகவே அங்கு இக்காலம் வேதசாஸ்திரபண்டிதர்கள் அகப்படுவது அரிதாதலால் மேற்றிசைப்பண்டிதர் கோசங்களால் பொருட்டெளிந்து சில்மொழிபெயர்த்ததுபோல ஏதோசில நூல்முகங்களில் அங்குள்ளார் சொல்லிவிடுத்த பொருளையே எழுதுவாராயினர். பாருங்கள்! ஒருமேற்றிசைப்பண்டிதர் ஒருவர் 'கஜச்சாயையில் பிண்டங்கொடுக்கவேண்டும்' என்றவாக்கியத்திற்கு 'யானைநிழலில் பிண்டதானஞ்செய்யவேண்டும்' எனவாரியர் வழக்கறியாது பொருட்படுத்தினார்போல ஏதோ சிறிது தவறு அதிலிருக்கக்கூடுமோயினும் அவர்பெற்றிருந்த தேசாபிமான மதாபிமானிகளுக்காக அவரை மதித் தாசிகூறி ஏதாகிலும் தவறுகண்டால் அதைப் பொறுமையுடன் சம்பிரதாயஞான வித்துவான்கள் முன்னிலையில் விசாரித்து ஒதுக்க வேண்டியது நியாயம். அதைவிட்டு அவரேசொன்னாரென்றால் எவர் அதை ஒப்புவாரென்று இவர் நினைத்தாரோதெரியவில்லை. மேலும் வாயுசங்கிதை உத்தரபாகத்தில் கிருஷ்ணோபமன்யு சம்வாதத்துள்ள வசனங்களையெலாம் எடுத்து ஸாரநிருபணம்முன்னரேசெய்தோம். ஆதலின்இவர் தமக்கு மேற்கோளாகக்கொண்ட அந்நாவலரால் இவ்விஷயத்தில் கொண்டகருத்து அவலமென்றே நாட்டப்பட்டது. இவ்வளவோடு ஷ ஐயர் எழுதிய மூன்றாம்விஷயம் 112 - பங்திகளும் கண்டிக்கப்பட்டன. மேலே அடுத்த விஜயத்துவஜத்தில் இதன்றொடராய் எழுந்தவிஷயத்தைப் பரிசீலிப்பாம். அதுவும் 154-வரிகள்கொண்டன. இதை ஷ விஜயத்துவஜ பத்திரிகாசிரியார் தமது பத்திராதிபர் விஷயத்துக்கடுத்த உபபத்திராதிபர் விஷயமாகக்கொண்டச் சிட்டார். இதுவே இதற்கு விசேஷம். இதில் இவர் சில வாயுசங்கிதாவசனங்களை விசாரிப்பது 1-முதல் 60 - வரிகள். 1. அதன்மேல் ஸ்ரீகண்ட முனிவரே இம்மதபாஷ்ய கர்த்தாவென்றது சிலவரிகள். 2. அதன்மேல் ஸ்வயசித்தாந்தம் தம்மினம்புகழ்தல் சிலவரிகள். 3. மேல் சங்கராசாரியர் அவரதினத்தாரை நிந்தித்தது சிலவரிகள். 4. மேல் உபசங்காரம் சிலவரிகளுமாம். 5. ஆகவே ஐந்து விஷயங்கள் இதிலமைந்தன. அவற்றில் பெரும்பான்மை முன்னரே விசாரிக்கப்படினும் இங்கெழுதியவற்றில் எஞ்சிய சிறுபான்மையை வரிவரியாய் விசாரித்து அவற்றுள் கொள்ளற்பாலனவைகளைக் கொண்டு தள்ளற்பாலனவைகளைத் தள்ளி சத்சித்தாந்தமிதுவென அவ் வையர்கொண்டவழி அதே பிரமாணங்களைக்கொண்டே காட்டுவோம்.

அவர்எடுத்தது வருமாறு:—

தருமம்: அபரதருமம், பரதருமம் இவ்விரண்டும் சுருதியிலே சொல்லப்பட்டனவென்றும், பரதருமமானது சுருதிமுடிபற்றியதாமென்றும், அபரதருமமானது, கன்மகாண்டம், சுருதியடிபற்றியதாமென்றும், பசு தருமம் அபரதருமமென்றும், பசு தருமமல்லாத பதி சிவதருமம் பரதருமமாமென்றும், அச்சிவதருமம் கன்மயாகம், தபோயாகம், ஜெபயாகம், தியானயாகம், ஞானயாகமென ஐவகைப்படுமென்றும், இந்த யாகங்கள் ஒன்றுக்கொன்று மென்மேலுயர்வுடையனவாமென்றும், அபரதருமமானது பரதருமத்துக்குச் சாதனமாமென்றும், அடிச்சுருதியானது தருமசாஸ்திரங்களினாலே ஸாங்கோபாங்கமாக நன்கு உபபிருங்கணஞ் செய்யப்படுமென்றும், யோகத்தியான பரியந்தம் உள்ள பரதருமமே சுருதி சிரஸிலே முடிவாகச் சொல்லப்பட்டதாமென்றும், அச்சுருதி முடியொட்டிய சிவதருமமானது இதிகாசபுராணங்களினாலே தெளிவின்றி உபபிருமமணஞ்செய்யப்படுமென்றும், அது பின்னும் சைவாகமங்களினாலே சாங்கோபாங்கமாய் சம்ஸ்காராதிகாரத்தோடும் ஆத்வசுத்தியோடும் நன்றாக உபபிருமமணஞ்செய்யப்படுமென்றும், சைவாகமங்களிலேயுள்ள சர்யை, கிரியை, யோகம், ஞானமென்னும் இந்நான்கும் பரதருமமாமென்றும், அவற்றுள் பாசுபதயோகம் சிவத்தையுறுதியாகப் பிரத்தியக்ஷமாக்குமென்றும், அதனால் அந்தப் பாசுபதயோகமே முக்கியமாகவநுஷ்டிக்கப் பாற்றுமென்றும், ருரு, ததீசி, அகஸ்தியர், உபமன்யு முதலிய ¶பெரியோர்கள் வைதிகபாசுபதர்களாமென்றும், அவர்கள் சந்தானசாரியர் நூற்றுவர் ஆயிரவரென்னுந்தொகையினராமென்றுங்கொண்டகருத்தினலென்க. சிவபுராணம்:

க- வரஶ்சாவரஶ்சைவ த்வௌ தர்மௌ வேதஸம்பவௌ|

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

உ- யஶ்ச ஸர்வார்த ஸம்ஸித்த (த்ருயம்) ஶ்ருதிஶிரஸி ஸ்திதः|

ங- சுவஶாஸ்த்ராதிகார ஸ்யோயஶ்சவரசரஶ்ச தः||

*   *   *   *   *   *   *

ச- ஸதாசம்வவியோஜ்ஞயः ஸம்வஹிஃவவஶ்ஹிஃ க்ருஶாஸ|

ரு- வயத்ர (க்ரியா) தவொஜவஶ்யாந ஜ்ஞாநாத்திர நாத்தரொः|| (ஶைः)

சூ- தைரெவவொத்தரொஃஸிஜோ யஶ்ச ஸ்ர்வ ரஶ்சர (யஶ்த்வாவரஶோ)ஶ்தः||

எ-¶ ஸவாயவேரொயஶ்ஃவாயஶ்ஸ்யாய நம.

அ- யஶ்ஶாஸ்த்ராதிஹிஸ்ஸ்ரீ க்ஷாம்ஹவெவ ப்ருஹிதः||

கூ- தத்ராத்யः வரஶோயஶ்ஶ்ரேஷ நாஷாந ஶ்ஹிதः|

௰- இதிஹாஸபுராணாப்யாம் கயம்விதஃவ ப்ருஹிதः||

கக- ஶைவாமஶெஷாஸவ நஸ்யாம் ஶைவாம் மஸ்யஸ்ஸ்ர:||

கஉ- ஸம்ஸ்காராதயிகாராஶ் ஸ்த்யமெவொவப்ருஹிதः|

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

*   *   *   *   *   *   *

கங- தத்ராத்யः வரஶோயஶ்ச்யஶ்ராத்யாத்ர வத்ஃவிஃயः|

கச- * ஜ்ஞாநம்க்ரியாவவயஶ்ரவ யொமஶ்சுஶ்ஸ்ரீ ஸேஸ்ஸி|

கரு- தேஷாவாஶவதாயொமஸ்ஸிவம் ப்ரத்யக்ஷயெஜ்ஞஃஸ்ஃ|

கசூ- தஸ்மாஜ்ஞேஷ்ஶ நாஷாநம் யொமஃவாஶவதோஶதः|

கஎ- ¶ ரூரூஃஶ்யீவொமஸ்த்யஶ்ச உவஶந்யுஶ் ஹாயஶா:|

கஅ- தேவவாஶவதாஸ்ஸிஜா ஸம்ஹிதா நாம் ப்ரவதஃகா:|

ககூ- தத்ஸதீயாமஃரவஸ்யகஶோயஸஹஸ்ரஶः

என்று கூறியவற்றால் கன்மயாகம்முதலிய ஐந்தனுள்ளே நான்காவதாகிய தியானபரியந்தமே [பாசுபதயோகபரியந்தமே] வேதசிரஸ்பேசிமுடிப்பதாம் எனவும், சிவாகமங்களிலே பேசப்படும் சர்யையாதி நான்கனுள்ளே மூன்றாவதாகிய (பாசுபத) யோகம் எனப் பேசப்படுவதும் முன்னர்கூறிய நான்காவதாகிய தியானயாகமெனப்படுவதும் ஒன்றேயாம் எனவும், இந்த வைதிக பாசுபத யோகமே சிவாத்துவிதிகள் நிலையாம் எனவும், என்றவரைச்சில.

இவற்றுள் உள்ள மோசத்தைக்காட்டுவோம். ஒருவர் ஒரு சித்தாந்தத்தை நிலைநாட்டவெழுவாராயின் அவர் பிரமாணங்களை ஒளிக்காது எடுத்துக் காட்டிப், புரட்டாது பொருளுரைத்துப்,பொருந்தச் சித்தாந்தம் செய்யவேண்டும். அங்ஙனமின்றி வடநூற்பயிற்சியற்ற தென்கலைப் பிரபஞ்சம் மயங்க ஏதேதோ சில வடமொழிவசனங்களை எடுத்து

அதனூடேகலந்துகிடக்கும் தமக்கு விரோதவசனங்களை மறைத்துத் தொடர்பற்ற சிலவசனங்களைச்சேர்த்து முறைபு றட்டி தமக்கிஷ்டம்போல் பொருட்படுத்துவது என்றும் நியாயவாதிக்கழகல்ல; மற்று விதண்டாவாதிக்கே யஃதுரிய தாகும். பாருங்கள்! இங்கு இவ்வாதியார் எடுத்தவசனங்களில் * இக்குறியுள்ளவிடமெல்லாம் உள்ளவசனங்கள் துலைக்கப்பட்டன. ¶இக்குறியுள்ளனபுறட்டப்பட்டன. + இக்குறியுள்ளன அங்கிலாது எங்கேயோ நின்று வருவிக்கப்பட்டன. அங்கு விடப்பட்ட வசனங்கள் அப் பிரகரணத்துக் கனுவசியகமல்ல; மற்று அது அவர் கொள்கைக்கு முற்றும் விரோதம். ஆகவே புராணத்துள்ளபடி அவ்வசனங்களையும் அதன் பொருளையும்முறைபிறழாதுகாட்டிஇவர்பாசுபதயோகத்தைப் பாராட்டிய வுரிமை யவலமாவதைவிரிப்பாம். இவ்வசனங்கள் சிவபுராணம் வாயுசங்கிதை பூர்வபாகம் 28-ம் அத்தியாயத்துவக்கத்தில் உள. அவையாவன.

க- வாயு: ॥ ஶைவோ ஹி பரமோ தர்ம: ஶ்ரேஷ்டாநுஷ்டாநஶப்தித:।

உ- யத்ராபரோக்ஷம் லக்ஷ்யேத ஸாக்ஷாந்மோக்ஷப்ரதஶ்ஶிவ:।

ங- ஸ து பஞ்சவிதோ ஜ்ஞேய: பஞ்சபி: பர்வபி: க்ரமாத்।

ச- க்ரியாதபோஜபத்யாந ஜ்ஞாநாத்மபிரநுத்தமை:।

ரு- தைரேவ ஸோத்தரைஸ்ஸித்த: தர்மஸ்து பரமோ மத:।

சா- பரோக்ஷமபரோக்ஷம் ச ஜ்ஞாநம் தத்ர விமோக்ஷதம்।

எ- பரஶ்சாபரஶ்ச த்வௌ தர்மௌ ஹி ஶ்ருதிசோதிதௌ।

அ- தர்மஶப்தாபிதேயேऽர்தே ப்ரமாணம் ஶ்ருதிரேவ ஹி।

கூ- பரோ யோ மபயதர்மஜ்ஞோ தர்ம: ஶ்ருதிஶிரோகத:।

ய- தர்மஸ்த்வபரஸ்ஸுத்ரயம் ஶ்ருதிதைவேஷ்டித:

கக- பஶ்வாத்மாதிகாரஸ்ஸோ யோ தர்ம: பரோ மத:

கஉ- ஸாதாரணஸ்ததாந்யஸ்து ஸர்வேஷாமதிகாரத:।

கங- ஸசாயமபரோ தர்ம: பரதர்மஸ்ய ஸாதநம்।

கச- தர்மஶாஸ்த்ராதிபிஸ்ஸம்யக் ஸாங்கமேவோபப்ரும்ஹித:।

கரு- தத்ராத்ய: பரமோ தர்ம: ஶ்ரேஷ்டாநுஷ்டாநஶப்தித:।

கசா- இதிஹாஸபுராணாப்யாம் கஷ்டம் ஸம்வித்ய ப்ரும்ஹித:।

கஎ- ஶைவாகமைஸ்து ஸம்பந்நஸ்ஸாங்கோபாங்கஸ்ஸவிஸ்த்ருத:।

கஅ- ஸம்ஸ்காராத்யதிகாராஸ்து ஸம்யகேவோபப்ரும்ஹித:।

ககூ- ஶைவாகமபரோ தர்ம: ஸவிஸ்தர: ப்ரகீர்த்தித:।

உ0- ஶைவாகமோ ஹி த்விவிதஶ்ஶ்ரௌதோऽஶ்ரௌதஶ்ச கீர்த்தித:।

உக. ஶ்ருதிஸாரமய: ஶ்ரௌத: ஸ்வதந்த்ர இதரோ மத:।

உஉ- ஸ்வதந்த்ரோ தஶதா பூர்வம் ததாऽஷ்டாதஶதா புந:।

இவற்றுள் இவ்வையர் காட்டியவையும் அவற்றின் முறையையும் அதனுல் நேர்ந்தமுறை பிறழவும் பின்னரே காட்டுவாம். முன்னர் இவற்றின்பொருளை முறையே விரிப்பாம்:—

1. வாயுதேவன் சொல்லுகிறுர்—சைவமே பரமதருமதர்மம்; அதுவே சிரேஷ்டானுஷ்டானமெனப்படுவது.

2. அதனிடத்தே தான் சாக்ஷாத்மோக்ஷங் கொடுக்கும் சிவன் அபரோக்ஷமாகவறியப்படுவான்.

3. அத்தருமம் ஐந்துபர்வாக்களால் ஐவகைப்படும்.

4. கிரியை தவம் ஜெபம் தியானம் ஞானம் என்றவை சிறந்தன.

5. உத்தமமாய் அவைகளைப்பெற்றதே ஸித்தமான பரமதருமம்.

6. பரோக்ஷம் அபரோக்ஷமெனப்படும் இருவகைஞானமும் மோக்ஷத்தைக்கொடுப்பதே.

7. பரமம் என்றும் அபரமம் என்றும் இருவகைதருமங்கள் வேதங்களில் சொல்லப்பட்டன.

8. தருமம் என்றசொல்லுக்குப்பொருளான வெல்லாவற்றிற்கும் சுருதியே பிரமாணம்.

9. யோகத்தைப் பரியந்தமாகப்பெற்ற பரமதருமம் வேதமுடிகளில் உள்ளது.

10. மூவகையான அபரமதருமம் சுருதிமுகத்தில் அதுபோலவே உள்ளது.

11. எது பரமதருமமோ அதுக்கதிகாரி அபசுவான ஆத்மாக்கள்.

12. அதனிலும் வேருனது எல்லோரு மதிகாரிகளாகப்பெற்றமையின் பொதுவாம்.

13. இந்தவபரதருமம் பரமதருமதர்மத்துக்குச் சாதனம்.

14. தருமசாஸ்திராதிகளால் இதுசாங்கமாக நன்றாக உபபிருங்கணம்செய்யப்பட்டது.

15. சிரேஷ்டானுஷ்டானம் எனப்பெயர்பெற்ற வாதியாய பரமதருமம்.

16. இதிஹாஸபுராணங்களால் கடினமாக விரிக்கப்பட்டது.

இன்னும்வரும்.